முழுப்பதிப்புரிமையுடையது / All Rights Reserved

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

Provincial Department of Education, Northern Province

மூன்றாம் **தவணைப் பரீட்சை** – 2025

3rd Term Exam – 2025

நீருயிரின வளத்தொழினுட்பம்	**Grade 10**	**T**	**82**	3 மணித்தியாலம் பத்து நிமிடம்

அறிவுறுத்தல்:

1. **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
4. **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்க்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (X)** இடுவதன் மூலம் காட்டுக.
5. **கணிப்பான்களைப் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது.**

பகுதி 1

1. .நீருக்குரிய வளங்களில் உயிருள்ள, உயிரற்ற வளங்கள் காணப்படுகின்றன இவற்றில் உயிரற்ற வளமாகக் காணப்படுவது.

01)முத்து, முருகைக்கல் 02)சூரை, பாரை

03)ஐதரில்லா, உல்வா 04)ஆமை, கடலட்டை

2. .EEZ என்பதன் விரிவாக்கம்.

01)இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் 02)சர்வதேச கடற்பரப்பு

03)பிரத்தியேக பொருளாதார வலயம் 04)ஆழ்கடல் வலயம்

3. பின்வரும் நீர்த்தேக்கங்களில் பெரிய நீர்த்தேக்கங்களில் மிகப்பெரியது எது?

01)உடவளவை 02)லுனகம்வெர

03)ரன்தம்பே 04)சேனநாயக்க சமுத்திரம்

4. தற்போது இலங்கையில் வளர்ப்புச்செய்யப்பட்டு ஏற்றுமதி தரம் வாய்ந்த நீருயிரின வளம் யாது?

01)சிங்கிஇறால் 02)கடல்முள்ளி

03)கடலட்டை 04)கணவாய்

5. .நெல்வயல்களில் வளர்ப்பதற்கு மிகப்பொருத்தமான மீனினம்.

01)வேக்கயா மீன் 02)திலாப்பியா

03)கட்லா மீன் 04)புற்காரப்

6. .பின்வருவனவற்றுள் சவர் நீரில் வாழும் மீனினத்தை மட்டும் கொண்ட தொகுதி.

01)சூரை,பாரை,சுறா

02)காவையா,களப்புஹந்தயா,புளத்ஹப்பயா

03)வேக்கயா,மொதா,கொஸ்ஸா

04)லேத்தியா,ஷல்மன்தண்டியா,மடகரியா

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

7. நீர்நிலைகளை ஆக்கிரமிப்புச் செய்யும் தாவர வளமாக அமைவது,

01)நீர்வாழை 02)கம்பொம்பா

03)பெகோபா 04)கெக்கட்டி

8. .சவர்நீர் சூழற்தொகுதிகளில் ஒன்றாக அமைவது.

01)முருகைக்கற்பாறைச் சூழற்தொகுதி 03)சதுப்பு நிலச் சூழற்தொகுதி

03)ஆற்றுச் சூழல் 04)தடாகச் சூழல்

9. .உருவில் காணப்படும் சவர்நீர்த்தாவரத்தின் வேருக்குரிய வகை.



01)மூச்சு வேர்

02)முழந்தாளுரு வேர்

03)மிண்டி வேர்

04)ஆணிவேர்

10. .A → B → C → D இவ் உணவுச்சங்கிலியில் 2 ஆம் படி நுகரியாக அமைவது.

01).A 02)B 03)C 04)D

11. 2002 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்கின்படி இலங்கையிலுள்ள சதுப்பு நிலங்களின் மொத்தப் பரப்பளவு.

01)20000 Ha 02)5000 Ha 03)26000 Ha 04)23797 Ha

12. தடாகத்தில் உள்ள நீர் நிலையில் நீரின் பெறுமானம் குறைவடைந்து காணப்படுவதனை நிவர்த்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள்

01)நீறிய சுண்ணாம்பு 02)யூரியா 03)பொசுபேற்று 04)மணல்

13. உவர்நீர்ச் சூழலில் முருகைக்கற் பாறைகளைச் சார்ந்து வாழும் அலங்கார மீனாக அமைவது

01)வண்ணத்துப்பூச்சி மீன் 02)சிங்கிறால்

03)சூரை 04)சுறா

14. .இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேச கடற்பரப்பில் மீன்பிடியில் செல்வாக்குச் செலுத்தும் பருவக்காற்று வீசும் காலப்பகுதி எது?

01)நவம்பர் - டிசெம்பர் 02)டிசெம்பர் - மார்ச்

03)மே – செப்ரெம்பர் 04)ஏப்பிரல் - மே

15.. படத்தில் காட்டப்பட்டுள்ள வாய் வடிவத்தினை உடைய மீன்களாக அமைவன.



01)திருக்கை, விலாங்கு 02)அறக்குளா, சூரை

03)முரல். ஏஞ்சல் 04)காரல், சூடை

16. இலங்கையில் அலங்கார மீன்களை ஏற்றுமதி செய்யும் பிரதான நாடுகளுள் ஒன்றாகக் கருதப்படுவது

01. அவுஸ்திரேலியா 02. யப்பான் 03. வடகொரியா 04. மடகாஸ்கார்

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

17. உருவில்க் காட்டப்பட்டுள்ள விலங்கு ஒரு



01)எக்கைனோடேமேற்றுக்கள் ஆகும் 02)மொலஸ்கா ஆகும்

03)கிரத்தேசியா ஆகும் 04)சீலந்திரேற்றாக்கள்

18. அறுவடை செய்ய இலக்காகக் கொள்ளப்படும் சேற்று நண்டு ஒன்றினது சிறப்பான நிறையானது.

01)50 – 100g 02)150 – 200 g

03)300 - 500 g 04)600 – 800 g

19. நன்னீர்த் தாவரத்தொகுதியாக அமைவது

01)கெக்கட்டி ,கம்பொம்பா, நீர்வாழை 02)திப்பரத்தை, சிறுகண்டல், கன்ன

03)அல்காக்கள், கடற்புல், கடற்சாதாழை 04)நீர்வாழை, சிறுகண்டல், அல்காக்கள்

20. படத்தில்க் காட்டப்பட்டுள்ள உபகரணத்தின் பயன்பாடு



01)நீரின் வெப்பநிலையை அளத்தல்

02)நீரின் உவர்ப்புத்தன்மையை அளத்தல்

03)நீரின் கலங்கற் தன்மையை அளத்தல்

04)நீரின் அடர்த்தியை அளத்தல்.

21 .முதுகு வயிற்றுப்புறம் தட்டையான மீனினம் எது?

01)சூரை 02)சூடை

03)பாரை 04)திருக்கை

22. நீர்த்தாவரத்தில் அதிகம் தொற்றும் நோய் அல்லாதது.

01)இலைப்புள்ளி நோய் 02) தண்டழுகல் நோய்

03)வெண்புள்ளி நோய் 03) இளம் இலைகள் கருகிப்போதல்

23. உயிர்ப்பல்வகைமை குன்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் இயற்கை தோற்றப்பாடு அல்லாதது.

01)வரட்சி 02)வெள்ளப் பெருக்கு 03)மிகை நுகர்வு 04)சுனாமி

24. ஐஸ்கிறீம் தயாரிப்பில்ப் பயன்படுத்தப்படும் "**கரஜீனன்**" உற்பத்தி செய்வதற்கு பயன்படும் அல்கா வகை எது?

01)பச்சை அல்கா 02)கபில அல்கா

03)சிவப்பு அல்கா 04)நீலப்பச்சை அல்கா

25. நீருயிரின வளத்துடன் தொடர்புடைய உணவு சார்ந்த கைத்தொழிலாகக் காணப்படுவது

01. மீன்பதப்படுத்தல் கைத்தொழில் 02. விரிவாக்கற்சேவை

03. சுற்றுலாக் கைத்தொழில் 04. சுண்ணாம்புக் கைத்தொழில்

26. மீனக்களுக்கு நோயினை ஏற்படுத்தும் காரணியாக அமைவது.

01.நுண்ணங்கிகள் 02)போசணைக் குறைபாடு

03)ஒட்டுண்ணிகள் 04)யாவும் சரி

27. மீன்கள் வேகமாக நீந்துவதற்கு மீன் உடற்தசைகளில்க் காணப்படும் பதார்த்தம்.

01)அமோனியா 02)ஹிஸ்ரமீன் 03)அமினோஅமிலம் 04)புரதம்

28. மீன்கள் இடம்பெயரும் போது மிகவும் குறைவாகப் பயணம் செய்யும் மீனினம் எது?

01)திருக்கை 02)சூரை 03)கெலவல்லன் 04)விளை மீன்

29.முட்டையிடும் அலங்கார மீன்களாகக் கருத முடியாதது

01)கோல்ட் பிஸ், கார்ப் 02)ஏஞ்சல், பைற்றர் 03)கப்பி, மோலி 04)குராமி, சீப்ராமீன்

PAST PAPERS WIKI

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

30. அலங்கார வளர்ப்பு மீன்களில் காற்றறைவீக்கும் நோயினை (Abdominal dropsy) ஏற்படுத்தும் நோயாக்கி

01)பற்றீரியா 02)ஒட்டுண்ணி 03)பங்கசு 04)வைரசு

31. வளர்ப்பு மீன்களான வோக்கயன் குஞ்சுகளை அதிகளவில் பெற்றுக் கொள்ளக்கூடிய கடல் நீரேரிப் பிரதேசங்கள்

01)யாழ்ப்பாணம், பருத்தித்துறை 02)கற்பிட்டி, மன்னார்

03)மணற்காடு, செம்பியன் பற்று 04)புத்தளம், நீர்கொழும்பு

32. தொடர் செட்டையினை உடைய மீனினம்

01)விலாங்கு 02)குராமி 03)மொதா 04)கார்ப்

33. தொடுமுளைகள் என்பது எத்தொகுதியின் அங்கம்.

01)சுவாசத் தொகுதி 02)இனப்பெருக்கத் தொகுதி

03)புலனங்கத் தொகுதி 04)சமிபாட்டுத்தொகுதி

34. உணவுச் சங்கிலியில் தற்போசணிகள் எனப்படுவது.

01)தாவரங்கள் 02)ஊனுண்ணிகள்

03)தாவர உண்ணிகள் 04)அத்துமுண்ணிகள்

35. நீர்ச்சூழற் தொகுதிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் மீனினம் படத்தில் காட்டப்பட்டுள்ளது அதன் பெயர்.

01)ஏஞ்சல் 02)குராமி

03)பைற்றர் 04)பிராணா



36. பக்கக்கோட்டு புலனங்கம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள மீனினங்கள்

01)சூரை,பாரை 02)ஒட்டி,ஓரா 03)திலாப்பியா,காவையா 04)சுறா,திருக்கை

37. ஓடிகள் மூலம் இனப்பெருக்கம் செய்யும் நீர்த்தாவரம் எது?

01)நீர் வல்லாரை 02)கெக்கட்டி 03)சேம்பு 04)கிளசிலேரியா

38. ஏகார் உற்பத்திக்குப் பயன்படும் அல்கா எது?

01)கோடியம் 02)கிளசிலேரியா 03)உல்வா 04)சாகசம்

39. நீர்ச்சூழற் தொகுதியின் மாசாக்கி அல்லாதது.

01)பிரிகையடையா சேதனப்பொருள்

02)பார உலோகங்கள்

03)திண்மக் கழிவுப்பொருட்கள்

04)முருகைக் கற்கள்

40.அலங்கார மீனினங்களுக்கு நிறப்பொருளை வழங்கும் நோக்கில் இடப்படும் உணவு எது?

01)கோதுமை மா 02)உலர்ந்த இறால்த் தூள்

03)அரிசித் தவிடு 03)சுறா எண்ணெய்

(40×1=40 புள்ளிகள்)

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

பகுதி II

முதலாம் வினாவினையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01)

A)**நீர்ச்சூழலில் காணப்படும் பல்வேறு இரசாயன, பௌதீக, உயிரியல் இயல்புகள் இங்கு வாழும் அங்கிகளிலும், மீன்பிடித்தொழிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன.**

01.நீர்ச்சூழற் தொகுதிக்கு ஓட்சிசன் கிடைக்கும் முறைகள் **இரண்டு** தருக.

02.நீர்ச் சூழற்தொகுதியின் உயிர்ப்பல்வகைமையில் செல்வாக்குச் செலுத்தும் பௌதீகக் காரணிகள் **இரண்டு** தருக.

03.உயிரப் பல்வகைமையில் செல்வாக்குச் செலுத்தும் இயற்கைத் தோற்றப்பாடுகள் **இரண்டு** தருக.

04.எல்நினோ தோற்றப்பாட்டின் பாதிப்புக்கள் **இரண்டு** தருக.

05.கடற்கரை அரிப்பு காரணமாக ஏற்படும் பாதிப்புக்கள் **இரண்டு** தருக.

(5×2=10)

B)

01.நீர்ச்சூழற் தொகுதியில்க் காணப்படும் பாறை வகைகள் **இரண்டினைத்** தருக.

02.முருகைக்கற்பாறையின் இரண்டு வகைகளும் எவை?

03.கடற்புன்னிலங்கள் காணப்படும் பிரதேசங்கள் **இரண்டு** தருக.

04.கடற்புன்னிலம் சார்ந்த தொகுதியில்க் காணப்படும் முலையூட்டிகள் **இரண்டு** தருக.

05.உவர்ப்புத்தன்மை என்றால் என்ன?

(5×2=10)

02) இலங்கையின் பல பிரதேசங்களில் நன்னீர் சார்ந்த சூழற்தொகுதிகளானவை காணப்படுகின்றன. அவை நீருயிரின வளர்ப்பில் பாரிய பங்களிப்பினைச் செலுத்தி வருகின்றது.

01.உணவுக்காக, அலங்காரத்திற்காக வளர்ப்புச் செய்யப்படும் மீனினங்கள் **இரண்டு** வீதம் தருக.

02.மேற்கூறிய மீனினங்கள் வளர்ப்பில் ஈடுபடுவோருக்கு முக்கியத்துவம் பெறும் விதம் **மூன்று** தருக.

03.வளர்ப்பில் ஈடுபடுவோர் எதிர்கொள்ளும் இடர்கள் **மூன்று** தருக.

04.உணவுக்கான மீன்களில் இயற்கை, செயற்கை இனப்பெருக்க மீன்களுக்கு உதாரணம் **இரண்டு** வீதம் தருக.

(2+3+3+2=10)

03) நீர்தாவரங்களானவை உணவு, அலங்கார ரீதியிலும் வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது இவை நாட்டின் பொருளாதாரத்தில் கணிசமான அளவு தாக்கத்தை செலுத்துகின்றது.

01.இலங்கையில்க் காணப்படும் அல்காக்களின் முக்கியத்துவங்கள் **மூன்று** தருக.

02.நன்னீரில் செய்கை பண்ணக் கூடிய நீர்த்தாவரங்கள் **இரண்டு** தருக.

03.உணவுக்கான நீர்த்தாவர வளர்ப்பின் இனப்பெருக்க முறையையும் இனப்பெருக்கம் செய்யப்படும் தாவரங்கள் **ஒன்று** தருக

04.நீரத்தாவரங்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் பீடைகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள் **இரண்டு** தருக

(3+2+2+3=10)

04) நீருயிரின வளங்களானவை பொருளாதார ரீதியில் முக்கியத்துவத் பெறுகின்றன. இவை மீன்கள், மீன்கள் அல்லாத விலங்குள், தாவரங்கள் என வகைப்படுப்படுகின்றன.

01.மீன்கள் அல்லாத விலங்கு நீருயிரின வளங்களின் நான்கு வகைகளும் எவை?

02.மேற்கூறிய விலங்கு நீருயிரின வளங்களின் முக்கியத்துவங்கள் **இரண்டு** தருக.

03.இறால் வளர்ப்பில் வரிகொண்ட இறால்கள் பிதானமானவை. இவற்றின் சிறப்பியல்புகள் **இரண்டு** தருக.

04.மனிதனால் உருவாக்கப்பட்ட நீர்க் கட்டடைப்பில் இறால்களை வளர்ப்புச் செய்யும்போது காற்றூட்டம் செய்வதன் முக்கியத்துவங்கள் **இரண்டு** தருக.

(4+2+2+2=10)

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

05) நீர்ச் சூழற்தொகுதிகள் உவர்நீர், நன்னீர், சவரநீர் என பாகுபடுத்தப்படுகின்றது. இவற்றில் உயிருள்ள, உயிரற்ற கூறுகளும் காணப்படுகின்றன.

01.நீர்ச் சூழற்தொகுதியில் காணப்படும் இடைத் தொடர்புகள் எவை?

02.நீர்ச் சூழற்தொகுதியில் காணப்படும் இடைத்தொடர்புகளின் பாதிப்புக் காரணமாக இறந்த மீன் ஒன்றில் இருந்து வெளியேற்றப்படும் நச்சு வாயுக்கள் **மூன்று** தருக.

03.நீர்ச்சூழலுக்குப் பொருத்தமற்ற அங்கிகள் **இரண்டு** தருக.

04.நீர்ச்சூழலை பாதிப்படையச் செய்யும் மாசாக்கிகள் **இரண்டு** தருக.

(3+3+2+2=10)

06) விவசாயி ஒருவர் தனது காணியில் தடாகமொன்றை அமைத்து அதில் பல்லின வளர்ப்பு முறையிலான மீன் வளர்ப்பை மேற்கெகள்ள உத்தேசித்துள்ளார்.

01.தடாகத்தை அமைப்பதற்கான இடத்தை தெரிவு செய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக?

02.மேற்கூறிய வளர்ப்பிற்காக மீன்களைத் தெரிவு செய்யும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள்

இரண்டினை விபரிக்குக?

03.தடாகத்தில் மீன்களை அறிமுகம் செய்யும் விதத்தை சுருக்கமாக விபரிக்குக?

(4+2+4=10)

07) நீருயிரின வளங்களில் மீன்களானவை அவற்றின் வன்கூட்டின் அடிப்படையில் என்பு, கசியிழைய மீன்கள் வகைப்படுத்தப் படுகின்றன.

01.என்பு மீன் ஒன்றினை வரைந்து அதன் புறத்தேயுள்ள பாகங்கள் **நான்கினைப்** பெயரிடுக?

02.மீன்கள் காட்டும் சமூக நடத்தைக் கோலங்கள் **இரண்டு** தருக.

03.என்பு,கசியிழைய,ஓட்டு மீன்களுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

04.மீன்களின் போசணை முறையினை அறிந்து கொள்ள உதவும் உறுப்புக்கள் எவை அவற்றில் ஒன்றை சுருக்கமாக விபரிக்குக?

(2+2+3+3=10)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library